winmeen.com

முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

மே 2021

மே 01-07

1. 331,449,281 மக்கள்தொகையுடன் உலகின் மூன்றாவது அதிக மக்கள்தொகைகொண்ட நாடு எது?

அ) இந்தோனேசியா

ஆ) பாகிஸ்தான்

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஈ) வங்காளதேசம்

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியகம் அமெரிக்காவின் மக்கள்தொகை 331,449,281 என்று அறிவித்தது. இது, கடந்த பத்தாண்டுகளில் இது 7.4% அதிகரிப்பாகும். இந்த மக்கள்தொகை புள்ளிவிவரங்கள், மாநில சட்டமன்றங்கள் / சுயாதீன ஆணையங்களால் நாட்டின் அரசியல் வரைபடங்களை மறுவரையறை செய்ய உதவும்.

---

2. எந்த நாட்டின் இடைக்கால பிரதமராக ஆல்பர்ட் பஹிமி படேக் அறிவிக்கப்பட்டுள்ளார்?

அ) ஜிம்பாப்வே

ஆ) சாட் ☑

இ) பிலிப்பைன்ஸ்

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ சாட்டின் புதிய இராணுவ ஆட்சியாளர்கள் சமீபத்தில் நாட்டின் சமீபத்திய அதிபர் தேர்தலில் இரண்டாமிடத்தைப்பிடித்த ஆல்பர்ட் பஹிமி படேக்கை இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக அறிவித்தனர்.

✓ கிளர்ச்சியாளர்களுடன் போரில் அதன் முன்னாள் அதிபர் இட்ரிஸ் டெபி இறந்த ஒருவாரகாலத்திற்குப்பிறகு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இராணுவ அவை அதிகாரத்தைக் கைப்பற்றி இடைக்கால பிரதமரைத் தேர்ந்தெடுத்துள்ளது.

---

3. 'வங்கி இணைப்பில் வாடிக்கையாளர்களின் திருப்தி' குறித்த ஆய்வை நடத்தவுள்ள நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) ரிசர்வ் வங்கி ☑

இ) SEBI

ஈ) நிதியமைச்சகம்

✓ அண்மையில் பொதுத்துறை வங்கிகளின் இணைப்பின் தாக்கத்தைக் கண்டறிய, 'வாடிக்கையாளர் திருப்தி ஆய்வை' நடத்த இந்திய ரிசர்வ் வங்கி முடிவுசெய்துள்ளது. 'வங்கி வாடிக்கையாளர்களின் திருப்தி' குறித்த ஆய்வானது 21 மாநிலங்களைச் சார்ந்த மொத்தம் 20,000 பேரின் பங்களிப்பை உள்ளடக்கும். வாடிக்கையாளர் சேவைகளின் கண்ணோட்டத்திலிருந்து, இது நேர்மறையானதா என்பதை மதிப்பீடு செய்ய 22 கேள்விகள் கேட்கப்படும்.

---

4. UNICEF உலகளாவிய தடுப்பூசி முன்னெடுப்பை வழிநடத்தும் விளையாட்டு ஆளுமை யார்?

அ) உசைன் போல்ட்

ஆ) கிறிஸ்டியானோ ரொனால்டோ

இ) டேவிட் பெக்காம் ☑

ஈ) ரோஜர் பெடரர்

✓ தடுப்பூசி செயல்பாட்டில் விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் உருவாக்குவதற்காக, கால்பந்து வீரரும் UNICEF நல்லெண்ண தூதருமான டேவிட் பெக்காம், தடுப்பூசி தூதராக பணியாற்றி வருகிறார். உலக நோய்த்தடுப்பு வாரத்திற்கு முன்னதாக வெளியிடப்பட்ட காணொளியில் அவர் அண்மையில் இடம்பெற்றார். பெற்றோர்கள் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் தடுப்பூசிபோட ஊக்குவிப்பதற்கும், தொண்டை அடைப்பான், தட்டம்மை, போலியோ போன்ற நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் 'UNICEF"ற்கான 7 நிதியத்தையும்' அவர் நிறுவினார்.

---

5. காட்டுத்தீயால் சேதமான லுங்லே நகரம் அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?

அ) கேரளா

ஆ) உத்தர பிரதேசம்

இ) திரிபுரா

ஈ) மிசோரம் ☑

✓ மிசோரம் மாநிலத்தில் அமைந்துள்ள லுங்லே நகரத்திற்கு அருகிலுள்ள மலைகளில் பெரும் காட்டுத்தீ பரவி வருகிறது. இந்த தீ மாநிலத்தின் லுங்லே மற்றும் லாங்ட்லாய் மாவட்டங்களில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு பரவியதாக கூறப்படுகிறது. தீயை அணைக்க அஸ்ஸாம் ரைபிள்ஸ், எல்லை பாதுகாப்பு படை மற்றும் IAF பணியாளர்களின் உதவியுடனான தீயணைப்பு குழுவை அரசு ஈடுபடுத்தியுள்ளது.

---

6. தொழிலாளர் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஏப்ரல் 28 ☑

ஆ) ஏப்ரல் 29

இ) ஏப்ரல் 30

ஈ) மே 01

✓ உலகெங்கும் தமது பணியின்போது கொல்லப்பட்ட, காயமடைந்த, உடல் ஊனமுற்ற தொழிலாளர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல்.28ஆம் தேதி அன்று தொழிலாளர் நினைவு நாள் (Workers' Memorial Day) அனுசரிக்கப்படுகிறது. "Health and Safety is a fundamental workers' right" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

7. தொழில்மயமாக்கல் காலகட்டத்தின்போது, எந்த நாட்டினர், தொழிலதிபர்களின் உழைப்புச்சுரண்டலுக்கெதிராக கிளர்ச்சி செய்தனர்?

அ) ஐக்கிய பேரரசு

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

இ) ஜெர்மனி

ஈ) ஜப்பான்

✓ தொழில்மயமாக்கல் சகாப்தத்தின்போது, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தொழிலாளர்கள், உழைப்புச் சுரண்டலை மேற்கொண்ட முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக ஒன்றாக கிளர்ந்தெழுந்தனர். நியாயமான ஊதியம், வேலைக்கு இடையே இடைவேளை மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு ஆகிவற்றை அவர்கள் கோரினர். 1886 மே 1 அன்று நடந்த இக்கிளர்ச்சி, மே நாளின் கொண்டாட்டத்திற்கு வழிவகுத்தது.

✓ பன்னாட்டு தொழிலாளர் நாள் என்றும் அழைக்கப்படும் 'மே நாள்', மே.1 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில், முதல் மே நாள், 1923 மே.1 அன்று சென்னையில் உள்ள ஹிந்துஸ்தானின் தொழிலாளர் கிசான் கட்சியால் கொண்டாடப்பட்டது.

---

8. 'Responding to the COVID-19 Pandemic: Leaving no Country Behind' என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்புகள் எவை?

அ) IMF–UNICEF

ஆ) ADB–UNDP–UNESCAP ☑

இ) உலக வங்கி–UNDP

ஈ) IMF–ADB–UNICEF



✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது 'Responding to the COVID-19 Pandemic: Leaving no Country Behind' என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை UNDP & UNESCAP ஆகியவற்றுடன் இணைந்து வெளியிட்டுள்ளது.

✓ இந்த அறிக்கையின்படி, ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பணக்கார நாடுகள், ஏழை நாடுகளை விடவும் தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து விரைவாக மீள்கின்றன. இந்த வேறுபாட்டுக்கு நோயெதிர்ப்பு ஆற்றல், சுகாதார கட்டமைப்பு மற்றும் தடுப்பூசி போடுதல் ஆகியவற்றின் மாறுபாடு காரணமாக உள்ளதாக கூறப்படுகிறது.

---

9. ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) வெளியிட்ட சமீபத்திய அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில், இராணுவத்துக்கு அதிகம் செலவு செய்த நாடு எது?

அ) சீனா

ஆ) ரஷியா

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஈ) இந்தியா

- ✓ ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) அண்மைய அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) இராணுவத்துக்கு அதிகம் செலவுசெய்துள்ளது.
- ✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு (US) அடுத்த இடங்களில் சீனா, இந்தியா, ரஷியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் உள்ளன. இந்த ஐந்து நாடுகளும் இணைந்து உலக இராணுவ செலவினங்களில் 62 சதவீதத்தை கொண்டுள்ளன. 2.6 சதவீத அளவுக்கு, இந்த ஆண்டில், இராணுவ செலவினங்களில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

---

10. அனைத்து காண்டாமிருகங்களில் மிகச்சிறியதும், இரண்டு கொம்புகளைக்கொண்ட ஒரே ஆசிய காண்டாமிருகமும் எது?

அ) சுமத்ரா காண்டாமிருகம் ☑

ஆ) மலேசிய காண்டாமிருகம்

இ) அஸ்ஸாமிய காண்டாமிருகம்

ஈ) ஜாவா காண்டாமிருகம்

- ✓ சுமத்ரா காண்டாமிருகங்கள் வாழும் அனைத்து காண்டாமிருகங்களில் மிகச்சிறியனவாகும். இரண்டு கொம்புகளைக் கொண்ட ஒரே ஆசிய காண்டாமிருகம் அவைதாம். அவை, அவற்றின் நீண்ட கூந்தலுக்காக சிறப்பித்து கூறப்படுகின்றன, எனவே அவை மயிருடைய காண்டாமிருகம் என்று அழைக்கப்படுகின்றன. 100'க்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள சுமத்ரா வகை காண்டாமிருகங்கள் உலகின் மிகவும் அழிந்து வரும் பாலூட்டி இனங்களில் ஒன்றாக உள்ளன.
- ✓ அண்மையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், மீதமுள்ள சுமத்ரா காண்டாமிருகங்கள் மிகக்குறைந்த அளவிலேயே உள்ளினச்சேர்க்கையை மேற்கொள்வது கண்டறியப்பட்டுள்ளது. இது பாதுகாப்பிற்கான ஒரு நல்ல அறிகுறியாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. #BedsForTN: ஆக்ஸிஜன் தேவை மற்றும் படுக்கைகளை நிர்வகிக்க அரசின் திட்டம்

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், தீவிர சிகிச்சை பிரிவில் படுக்கைகள் கிடைப்பது மற்றும் தனியார் மருத்துவமனைகளில், ஆக்சிஜன் உருளைகள் தேவைகளை நிர்வகிப்பதற்காக, COVID-19 ஒருங்கிணைந்த கட்டளை மையம் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய நலவாழ்வு குழுமத்தில் அமைக்கப்பட்டுள்ள இம்மையமானது, தற்போதுள்ள 104 சுகாதார சேவை மையங்களுடன் இணைந்து செயல்பட உள்ளது. மேம்பட்ட செயல் திறன் மற்றும் மேம்பட்ட சுகாதார பணிகளுக்காக முதலமைச்சர் காப்பீட்டுத்திட்டம், மருத்துவமனைகள் நிறுவன சட்டம் மற்றும் பொது சுகாதார சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு ஒருங்கிணைந்த கட்டளை மையமான UCC செயல்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

24 மணி நேரமும் செயல்படும் UCC மையமானது, படுக்கை மேலாண்மையை ஆன்லைன்மூலம் கண்காணித்து, தேவைப்படும் மக்களுக்கு உதவவுள்ளது. படுக்கைகள் தேவைப்படுவோருக்கு ஆதரவாக டுவிட்டர் கணக்கு ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இந்தச் சேவையை பரவலாக கொண்டுசேர்ப்பதற்காக, #BedsForTN என்ற ஹாஷ்டேக் உருவாக்கப்பட்டு உள்ளது. பொதுமக்கள் இந்த COVID-19 ஒருங்கிணைந்த கட்டளை மைய சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

2. கீழடி அகழாய்வில் காதில் அணியும் தங்க வளையம் கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்றுவரும் ஏழாம்கட்ட அகழாய்வில், காதில் அணியும் தங்கவளையம் கண்டெடுக்கப்பட்டது. திருப்புவனம் அருகே கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 இடங்களில் ஏழாம்கட்டமாக அகழாய்வுப்பணி நடைபெற்றுவருகிறது.

கீழடி, கொந்தகையில் தலா மூன்று குழிகளும், அகரத்தில் ஒரு குழியும் தோண்டப்பட்டுள்ளன. இந்நிலையில், கீழடியில் தோண்டப்பட்ட 1 குழியில் இருந்து காதில் அணியும் தங்க வளையம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த வளையத்தை நீட்டினால் 4.5 செமீ நீளமும், வளையமாக வளைத்தால் 1.99 செமீ விட்டமும் கொண்டதாக உள்ளது. இவ்வளையத்தை ஆய்வுக்குட்படுத்திய பின்னரே இதன்காலம் தெரியவரும்.

---

3. முக்கிய துறைகளின் உற்பத்தி 6.8% உயர்வு

நாட்டின் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி சென்ற மார்ச் மாதத்தில் 6.8 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு பொருள்கள், உரம், உருக்கு, சிமெண்ட், மின்சாரம் ஆகிய 8 முக்கிய துறைகளின் உற்பத்தி 2020 மார்ச் மாதத்தில் –8.6% என்ற அளவில் பின்னடைவைச் சந்தித்திருந்தது. இந்த நிலையில், நடப்பாண்டு மார்ச்சில் இத்துறைகளின் உற்பத்தி 6.8 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், இயற்கை எரிவாயு, உருக்கு, சிமெண்ட் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் உற்பத்தி முறையே 12.3%, 23%, 32.5% மற்றும் 21.6% என்ற அளவில் அதிகரித்துள்ளன.

கடந்தாண்டு மார்ச்சில் இத்துறைகளின் உற்பத்தி முறையே –15.1 சதவீதம், –21.9%, –25.1%, –8.2% என்ற அளவில் பின்னடைவைக் கண்டிருந்தன. நடப்பாண்டு மார்ச்சில் நிலக்கரி, கச்சா எண்ணெய், சுத்திகரிப்பு பொருள்கள் மற்றும் உரத்துறைகளின் உற்பத்தி எதிர்மறை வளர்ச்சியைக்கண்டன. முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 2020–21 ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் 7% சரிவைடந்துள்ளது.

அதேசமயம், கடந்த 2019–20'இல் இத்துறைகளின் உற்பத்தி 0.4% நேர்மறை வளர்ச்சியை பதிவு செய்திருந்ததாக வர்த்தக அமைச்சகம் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

4. பாண்டியர்களின் துறைமுக தலைநகரம் கொற்கை அகழாய்வில் – 2,800 ஆண்டுகள் பழமையான செங்கல் கட்டுமானம் கண்டுபிடிப்பு:

பாண்டிய மன்னர்களின் துறைமுக தலைநகராக விளங்கியதாக கூறப்படும் தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் நடைபெற்று வரும்அகழாய்வில் சுமார் 2,800 ஆண்டுகள் பழமையான செங்கல் கட்டுமானம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. தமிழக தொல்லியல் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு முன்னர் கொற்கையில் கடந்த 1968 மற்றும் 1969–ம் ஆண்டுகளில் அகழாய்வு நடைபெற்றது.

இதில், கொற்கை நகரம் 2,800 ஆண்டுகால பழமையானது என்பது உறுதியானது. இங்கு துறைமுகம் இருந்ததாகவும், இங்கிருந்து கடல்வழி ஏற்றுமதி, இறக்குமதி நடந்ததாகவும், பாண்டிய மன்னரின் தலைநகராக இந்த இடம் விளங்கியதாகவும் அறியப்பட்டது. **சங்கு அறுக்கும்:** தொழில் பண்டைய துறைமுக நகரான கொற்கையில் 52 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது அகழாய்வு நடைபெற்று வருகிறது. இந்த அகழாய்வில் 2,800 ஆண்டுகள் பழமையான செங்கல் கட்டுமானம் கிடைத்துள்ளது.

இந்தப் பகுதியில் சங்கு அறுக்கும் தொழில் நடந்துள்ளதை உறுதிப்படுத்தும் விதமாக, ஒரு குழியில் சங்குகள் முழுமையாகவும், அறுத்த நிலையிலும் உள்ளன. மேலும் அதேகுழியில் சங்குகளை அறுத்த பின்னர் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் பல வடிவங்களில் கிடைத்துள்ளன. வெளிநாட்டு தமிழறிஞர் கால்டுவெல் இப்பகுதியில் அகழாய்வுசெய்தபோது, தெருமுழுவதும் சங்குகளும், வெளிநாட்டு நாணயங்களும் கிடைத்தன என எழுதியுள்ளார். தற்போதும் அகழாய்வின்போது சங்குகள் கிடைக்கின்றன.

---

5. இந்தியாவுக்கு உயிர் காக்கும் கருவிகள் தருகிறது ஜப்பான்

இந்தியாவுக்கு வென்டிலேட்டர்கள் உள்ளிட்ட உயிர் காக்கும் கருவிகளை ஜப்பான் வழங்க உள்ளது. COVID-19 வைரஸ் பரவலை சமாளிப்பதற்காக இந்தியாவுக்கு 300 செயற்கை சுவாச வழங்கிகள், 300 உயிர்வளி செறிவாக்கிகளை வழங்க ஜப்பான் நடவடிக்கை எடுத்து வருகிறது. இவை ஒரு வாரகாலத்துக்குள் இந்தியா வந்து சேரும்.

1. 'பொருளாதார அறிக்கையின் நிலை'யை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) உலக வங்கி

இ) ரிசர்வ் வங்கி ☑

ஈ) NITI ஆயோக்

✓ ரிசர்வ் வங்கியானது அண்மையில், 'பொருளாதார நிலை' அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில், COVID-19 நோய்த்தொற்றுகள் உடனடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என்றும் அதன் காரணமாக விநியோகச் சங்கிலி கடுமையாக பாதிக்கும் என்றும் அது பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

2. சாண்ட்லர் நல்லரசு குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 14

ஆ) 49 ☑

இ) 100

ஈ) 150

49

✓ சாண்ட்லர் நல்லரசு குறியீட்டில் இந்தியா 49ஆவது இடத்தில் உள்ளது. இக்குறியீட்டில் பின்லாந்து முதலிடத்தில் உள்ளது. 50'க்கும் மேற்பட்ட திறந்த தரவுகளின் அடிப்படையில் இந்தக் குறியீடு 104 நாடுகளைத் தரவரிசைப்படுத்தியுள்ளது. இது தலைமைத்துவம் மற்றும் தொலைநோ-க்குப் பார்வை; வலுவான சட்டங்கள் மற்றும் கொள்கைகள்; வலுவான நிறுவனங்கள்; நிதி; ஈர்க்கக்கூடிய சந்தை; உலகளாவிய செல்வாக்கு மற்றும் நற்பெயர்; மற்றும் நாட்டு மக்களை முன்னுக்குக் கொண்டுவர உதவுவது ஆகிய கொண்ட ஏழு தூண்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

---

3. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற தீபிகா குமாரி மற்றும் அதானு தாஸ் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) குத்துச்சண்டை

ஆ) மல்யுத்தம்

இ) டேபிள் டென்னிஸ்

ஈ) வில்வித்தை ☑

✓ இந்தியாவின் முன்னணி வில்வித்தை சாம்பியன்களான தீபிகா குமாரி மற்றும் அவரது கணவர் அதானு தாஸ் ஆகியோர் வில்வித்தை உலகக் கோப்பை நிலை-1 மகளிர் மற்றும் ஆடவர் நிகழ்வின் 'ரீகர்வ்' நிகழ்வில் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளனர். கடந்த 7 ஆண்டுகளில், மகளிர் 'ரீகர்வ்' அணிக்கு இது முதல் உலகக்கோப்பை தங்கப்பதக்கம் ஆகும்.

✓ மேலும், அதானு தாஸ் மற்றும் அங்கிதா ஆகியோரைக்கொண்ட இந்தியா-வின் கலப்பு அணி, அதே போட்டியில் வெண்கலம் பெற்றுள்ளது.

---

4. ஐநா பன்னாட்டு செர்னோபில் பேரிடர் நினைவு நாள் அனுசரிக்க-ப்படுகிற தேதி எது?

அ) ஏப்ரல் 20

ஆ) ஏப்ரல் 26 ☑

இ) ஏப்ரல் 30

ஈ) மே 1

✓ செர்னோபில் அணுவுலை பேரிடரானது 1986ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஐநா அவையானது ஆண்டுதோறும் ஏப்ரல்.26'ஐ சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவுநாளாக அனுசரித்துவருகிறது.

✓ நடப்பாண்டு (2021), இந்த அணுவுலை பேரிடரின் முப்பதாம் ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. அணுவாற்றலின் அபாயங்கள் மற்றும் செர்னோ-பில் பேரிடரின் விளைவுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

---

5. வானூர்தி பொறிகளுக்கு, 'கிரிஸ்டல் தகடு தொழில்நுட்பத்தை' உருவாக்கிய அமைப்பு எது?

அ) ISRO

ஆ) HAL

இ) BEL

ஈ) DRDO ☑

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO), ஒற்றை படிக தகடு (Single Crystal Blade) தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் உலங்கூர்தி மேம்பாட்டு திட்டத்திற்கு பயன்படுத்துதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பத்தின்கீழ் 60 தகடுகள் HAL நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

---

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற DANTAK திட்டம், BRO'ஆல் எந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை திட்டமாகும்?

அ) வங்காளதேசம்

ஆ) நேபாளம்

இ) பூட்டான் ☑

ஈ) மியான்மர்

✓ அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில், கடந்த 1961 ஏப்.24 அன்று DANTAK திட்டம் நிறுவப்பட்டது. இது, எல்லைப்புறச் சாலைகள் அமைப்பின் (BRO) மிகப்பழைமையான திட்டங்களுள் ஒன்-றாகும், இது பூட்டானில் வண்டிகள் செல்லக்கூடிய சாலைகளை அமை-க்கும் பணியில் ஈடுபட்டது. அண்மையில், இத்திட்டத்தின் வைரவிழா, பூட்டானில், டான்டாக் நினைவிடத்தில் நினைவுகூரப்பட்டது.

---

7. 'பணியின் போதான பாதுகாப்பு & நலம்' குறித்த உலகளாவிய உத்தி' என்பதுடன் தொடர்புடைய அமைப்பு எது?

அ) WTO

ஆ) ILO ☑

இ) IMF

ஈ) WCO

✓ பணியின் போதான பாதுகாப்பு மற்றும் நலத்திற்கான உலக நாள், முதன் முதலில், 2003ஆம் ஆண்டில் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பால் (ILO) அதன் பணியின்போதான பாதுகாப்பு மற்றும் நலம் குறித்த உலகளாவிய உத்தியின் ஒருபகுதியாக கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் ஏப்.28 அன்று பணியிடங்களில் நிகழும் விபத்துக்கள் மற்றும் நோய்களின் தடுப்புகுறித்து கவனஞ்செலுத்துவதற்காக 'பணியின்போதான பாதுகாப்பு மற்றும் நலத்திற்கான உலக நாள்' என்று அனுசரிக்கப்படுகிறது.

---

8. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, இந்தோ-ஜெர்மன் திட்டமான 'பைரசோல்' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) கரியமிலவாயு உமிழ்வைக் குறைத்தல்

ஆ) நகர்ப்புற கழிவு மேலாண்மை ☑

இ) மலேரியாவை ஒழித்தல்

ஈ) பெண்களில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவது

✓ பொலிவுறு நகரங்களின் நகர்ப்புற இயற்கைக் கழிவுகளை உயிரிக் கரிமப் பொருட்கள் மற்றும் ஆற்றலாக மாற்றுவதற்காக இந்தோ-ஜெர்மன் திட்டமான 'பைரசோல்' திட்டம் தொடங்கப்பட்டது. இது, CSIR-CLRI'க்கு இந்தோ-ஜெர்மன் அறிவியல்&தொழினுட்ப மையத்தால் வழங்கப்பட்டது.

✓ இது, இந்திய சீர்மிகு நகரங்களின் நார்த்தன்மையுள்ள கரிமக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் கசடுகள் ஆகியவற்றை உயிரிக்கரிமப் பொருட்களாக செயலாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த சோ-லார் உலர்த்தி மற்றும் வெப்பச் சிதைவு மையத்துக்கான அடிக்கல், அண்மையில், தமிழ்நாட்டின் சென்னை CSIR-CLRI'இல் நாட்டப்பட்டது.

---

9. கிரிப்டோ நிறுவனங்கள் கூட்டணியின், 'கிரிப்டோ காலநிலை ஒப்பந்தத்தின்' முதன்மை நோக்கம் என்ன?

அ) GHG உமிழ்வை ஒழித்தல் ☑

ஆ) காலநிலை மாற்ற திட்டங்களில் முதலீடு

இ) காலநிலைமாற்ற திட்டங்களுக்கு பிளாக் செயினைப் பயன்படுத்துதல்

ஈ) கிரிப்டோகரன்ஸிகள் குறித்து விழிப்புணர்வை உருவாக்குதல்

- ✓ கிரிப்டோகரன்சி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் கூட்டணியான –து கிரிப்டோ காலநிலை ஒப்பந்தத்தை அறிவித்துள்ளது. இது ஒரு தொழி–ற்துறைசார்ந்த ஒப்பந்தமாகும். இதில், கிரிப்டோகரன்சி நிறுவனங்கள் அனைத்தும் 2025'க்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறுவதாகவும், 2040'க்குள் பைங்குடில் வாயு வெளியேற்றத்தை முற்றி–லுமாக ஒழிப்பதாகவும் உறுதியளித்துள்ளன.
- ✓ இந்த ஒப்பந்தமானது ராக்கி மவுண்டைன் நிறுவனம்; புத்தாக்க ஒழுங்கு–முறைக்கான கூட்டணி; மற்றும் ஆற்றல் வலைய அறக்கட்டளை ஆகிய மூன்று இலாபநோக்கற்ற குழுக்களால் வழிநடத்தப்படுகிறது.

---

10. மீன்களுக்கான முதல் உள்நாட்டு தடுப்பூசியின் பெயர் என்ன?

அ) Nodavac–R ☑

ஆ) Fishaxin–R

இ) Fishyvac–R

ஈ) Newvac–R

- ✓ சென்னையில் உள்ள மத்திய உவர்நீர் மீன்வளர்ப்புக் கழகமானது வைரல் நரம்புத்திசு அழுகல் நோய்க்கு ஒரு உள்நாட்டு தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. Nodavac–R என்பது அந்தத்தடுப்பூசியின் பெயராகும். இந்த நோய், பெட்டனோடவைரஸால் ஏற்படுகிறது. இது பெரும்பாலும் எலும்பு மீனினங்களை தாக்குகிறது. இந்த வைரஸால் நாற்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன; அவற்றில் பெரும்பாலானவை கடல்மீனினங்கள். இந்த வைரஸ் தானூடுபரவுதல் மற்றும் தொடர்பின் மூலமாகவும் பரவுகிறது. இந்த நோய், பெரும்பாலும் மீன்குஞ்சுகளில் ஏற்படுகிறது. சில வேளைகளில், பெரிய மீன்களையும் தாக்குகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. RBI துணை ஆளுநராக டி ரவிசங்கர் நியமனம்

இந்திய ரிசா்வ் வங்கியின் (RBI) துணை ஆளுநராக நிர்வாக இயக்குநர் டி ரவிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். ரிசர்வ் வங்கியில் ஆளுநரும் நான்கு துணை ஆளுநர்களும் உள்ளனர். துணை ஆளுநராக இருந்த B P கனுங்கோ கடந்த ஏப்.2 அன்று ஓய்வுபெற்றார். அதையடுத்து, புதிய ஆளுந–ராக டி ரவிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் RBI நிர்வாக இயக்குநராக இருந்துவந்தார். மூன்றாண்டுகள் வரை அல்லது வயது காரணமாக பணி ஓய்வுபெறும் வரை அப்பதவியில் அவர் நீடிப்பார்.

---

1. இந்தியாவில், ஆயுஷ்மான் பாரத் திவாஸ் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஏப்ரல் 25

ஆ) ஏப்ரல் 28

இ) ஏப்ரல் 30 ☑

ஈ) மே 02

✓ ஆயுஷ்மான் பாரத் திவாஸ் ஆனது ஏப்ரல்.30 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆயுஷ்மான் பாரத் திட்டமானது, நாட்டின் தொலை தூர பகுதிகளில், எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் மலிவு விலையிலா –ன மருத்துவ வசதிகளை வழங்க முற்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ₹5 இலட்சம் வரை பயன்கள் கிடைக்கப்பெறுகிறது.

---

2. தில்லி திருத்தச்சட்டம், 2021'இன் தேசிய தலைநகர பிராந்தியத்தி –ன்படி, 'தில்லி அரசு' என்பது எதைக் குறிக்கின்றது?

அ) தில்லி முதலமைச்சர்

ஆ) தில்லி அமைச்சரவை அமைச்சர்கள்

இ) இந்தியப் பிரதமர்

ஈ) தில்லியின் துணைநிலை ஆளுநர் ☑

✓ தேசிய தலைநகரமான தில்லி அரசு (திருத்தம்) சட்டம், 2021 நடைமுறை –க்கு வந்துள்ளது. திருத்தப்பட்ட இச்சட்டத்தின்படி, தில்லியில் "அரசு" என்றால் "துணைநிலை ஆளுநர்" என்று பொருள். எந்தவொரு நிர்வாக முடிவையும் எடுப்பதற்கு முன்னர், தில்லி யூனியன் பிரதேசத்தின் தேர்ந் –தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தில்லி துணைநிலை ஆளுநரின் கருத்தை நாடவேண்டும்.

3.அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஊசித்தட்டான்களின் இரண்டு புதிய இனங்கள் (*Euphaea thosegharensis மற்றும் Euphaea pseudodi –spar*) இந்தியாவின் எந்தப் பகுதியைச் சார்ந்தவையாகும்?

அ) தீபகற்பம்

ஆ) சுந்தரவனக்காடுகள்

இ) மேற்குத்தொடர்ச்சி மலைகள் ☑

ஈ) இமயமலை

✓ இந்திய ஆராய்ச்சியாளர்கள் மகாராஷ்டிர மாநிலம் சதாரா மாவட்டத்தில் *Euphaea thosegharensis* & *Euphaea pseudodispar* எனப் பெயரிடப்பட்ட 2 புதிய வகை ஊசித்தட்டான்களைக் கண்டுபிடித்துள்ளனர். மேற்குத்தொ –டர்ச்சி மலைகளை ஆதியாகக்கொண்ட இவை, யூபியா இனத்தைச் சார்ந்த பெரிய பூச்சிகளாகும்.

---

4. "வளரும் ஆசியாவின் பொருளாதாரக் கண்ணோட்டம்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) உலக வங்கி

ஆ) புதிய வளர்ச்சி வங்கி

இ) ஆசிய வளர்ச்சி வங்கி ☑

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது அண்மையில், "வளரும் ஆசியாவின் பொருளாதார கண்ணோட்டம்" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் ஆசியாவின் பொருளாதாரம் 0.2% அளவுக்கு சுருங்கியது. 2020'இல் 2.8 சதவீதமாக இருந்த ஆசியாவின் சராசரி பணவீக்கம், 2021'ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

---

5. சுங்க குற்றங்களைத் தடுப்பதற்காக இந்தியாவிற்கும் எந்த நாடு / நாடுகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) USA மற்றும் ஜப்பான்

இ) UK மற்றும் வட அயர்லாந்து ☑

ஈ) பிரேசில் & தென் கொரியா

✓ சுங்க ஒத்துழைப்பு மற்றும் சுங்கத்துறை விஷயங்களில் பரஸ்பர நிர்வா –க உதவியை மேற்கொள்ள இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித் –துள்ளது. இந்த ஒப்பந்தம் இருநாடுகளின் சுங்க அதிகாரிகள் இடையே தகவல்களையும், உளவுத்தகவல்களையும் பகிர்ந்துகொள்ள சட்ட விதிமு –றையை வழங்கும். சுங்க விதிகளை முறையாக அமல்படுத்தி, சுங்க குற்றங்களைத் தடுக்கவும் விசாரிக்கவும் உதவும். மேலும், சட்ட ரீதியான வர்த்தகத்துக்கும் இது உதவும். இந்த ஒப்பந்தத்தின் வரைவு, இரு நாட்டு சுங்க நிர்வாகத்தின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ளது.

---

6. சமீபசெய்திகளில் இடம்பெற்ற யான்பு துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?

அ) ஆப்கானிஸ்தான்

ஆ) சவுதி அரேபியா ☑

இ) சூடான்

ஈ) சாட்

✓ யான்பு என்பது சவுதி அரேபியாவின் மேற்குப் பகுதியின் செங்கடல் கடற் கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுக நகரமாகும். அண்மையில், வெடிபொருட்கள் நிரம்பிய தானியங்கி படகு ஒன்று செங்கடலில் உள்ள யான்பு துறைமுகத்திற்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டது.

✓ குண்டுவெடிப்புக்கு காரணமாக அமைந்த அந்தப் படகை, சவுதி அரேபியா தடுத்து தாக்கியழித்ததாகக் கூறியுள்ளது.

---

7. 'உலக டூனா நாள்' 2021 மே.3 அன்று அனுசரிக்கப்பட்டது. டூனா சார்ந்த இனம் எது?

அ) பறவை

ஆ) மீன் ☑

இ) பூச்சி

ஈ) ஊர்வனம்

✓ உலக டூனா நாளானது 2021 மே.3 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. டூனா, ஒமேகா–3 நிறைந்த ஒரு மீனினமாகும். இந்த வகை மீன்களில் தாதுக்கள், புரதங்கள் மற்றும் வைட்டமின் B12 உள்ளி –ட்ட அதிக ஊட்டச்சத்துகள் இருப்பதால், அதிகப்படியான நுகர்வின் கார –ணமாக இவ்வினம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. கடந்த 2016ஆம் ஆண்டு டிசம்பரில், ஐநா பொது அவையானது மே.3ஆம் தேதியை உலக டூனா நாளாக அறிவித்தது.

---

8. WHO மற்றும் அவற்றின் கூட்டாளர்களால் (UNICEF மற்றும் GAVI) முன்மொழியப்பட்ட நோய்த்தடுப்பு நிரல், எந்த ஆண்டுக்குள் ஐம்பது மில்லியன் உயிர்களை காப்பாற்ற நோக்கம் கொண்டுள்ளது?

அ) 2022

ஆ) 2025

இ) 2030 ☑

ஈ) 2040

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) மற்றும் அதன் கூட்டாளர்களான ஐநா சிறார்கள் முகமை மற்றும் தடுப்பூசி கூட்டாளரான GAVI ஆகியவை ஒரு புதிய உலகளாவிய தடுப்பூசி உத்தியை வகுத்துள்ளன – நோய்த்தடுப்பு நிரல் 2030 (IA2030). ஏழை நாடுகளில் உள்ள 75% குழந்தைகள் உட்பட, 2030'ஆம் ஆண்டிற்குள் ஐம்பது மில்லியன் உயிர்களைக் காப் –பாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உத்தியானது உலகளவில் நிலவும் அம்மை மற்றும் பிற நோய்களுக்கு எதிரான தடுப்பூசி இயக்கங்களை அதிகரிக்கச் செய்கிறது.

---

9. இந்திய நிதிச்செயலாளரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கின்ற அமைப்பு எது?

அ) இந்திய உச்சநீதிமன்றம்

ஆ) அமைச்சரவை நியமனக்குழு ☑

இ) நிதியமைச்சகம்

ஈ) மக்களவை

✓ தற்போதைய செலவின செயலாளர் T V சோமநாதனை இந்திய அரசின் நிதிச்செயலாளராக நியமிக்க அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக பணியாளர் அமைச்சகம் உத்தரவு பிறப்பி–த்துள்ளது. இவர், 1987ஆம் ஆண்டு, தமிழ்நாட்டுப் பிரிவைச் சாரந்த இந்திய ஆட்சிப் பணி (IAS) அதிகாரியாவார்.

---

10. 'உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை–2021'ஐ வெளியிட்ட அமைப்பு எது?

அ) WWF

ஆ) UN ECOSOC ☑

இ) UNEP

ஈ) UNDP

✓ 'உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை – 2021' அறிக்கையை ஐநா அவையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை தயாரித்து வெளியிட்டுள்ளது. ஐநா அமைப்பின் காடுகளுக்கான உத்தி திட்டம் 2030'இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆறு உலகளாவிய வன இலக்குகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய 26 இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் குறித்த ஒரு கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்கு–கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் வனப்பகுதியை 3% வரை அதிகரிப்பது முதல் உலகளாவிய வன இலக்கு ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை அணுமின் நிலையத்துக்கு – புதிய இயக்குநர் நியமனம்:

கல்பாக்கத்தில் இயங்கிவரும் சென்னை அணுமின் நிலையத்தின் நிர்வா–க இயக்குநர் பணி ஓய்வுபெற்றதால், புதிய இயக்குநராக M பலராமமூர்த்–தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

---

2. சேதி தெரியுமா?

ஏப். 24: கரோனா நோயாளிகளுக்கான அவசர சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்தைப் பயன்படுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் அனுமதி அளித்தது.

ஏப். 24: இந்தோனேசிய கடற்படையைச் சேர்ந்த KRI நங்காலா 402 என்கிற நீழ்மூழ்கிக் கப்பல் 53 பேருடன் பாலி தீவு அருகே மாயமானது.

ஏப். 24: உச்சநீதிமன்ற 48ஆவது தலைமை நீதிபதியாக என்.வி. ரமணா பொறுப்பேற்றார்.

ஏப்.24: மின்னணு முறையில் சொத்துக்கான அட்டை வழங்கும் 'ஸ்வமித்வா யோஜனா' திட்டம் தொடங்கப்பட்டது.

ஏப்.25: நாடு முழுவதும் புதிதாக 551 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்களை அமைக்க மத்திய அரசு உத்தரவிட்டது.

ஏப்.25: உச்சநீதிமன்ற நீதிபதி மோகன் எம் சந்தான கவுடர் காலமானார்.

ஏப்.26, 27: ஆக்சிஜன் தயாரிக்க ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பது என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஸ்டெர்லைட் ஆலை ஜூலை 31 வரை செயல்பட உச்சநீதிமன்றம் அனுமதியளித்தது.

ஏப்.27: கவுதமாலா உலகக்கோப்பை வில்வித்தை முதல்நிலை போட்டியில் இந்தியாவின் தீபிகாகுமாரி, அதானு தாஸ் ஆகியோர் தங்கம் வென்றனர்.

ஏப்.28: இந்தியாவின் சுவாதி தியாகராஜன் தயாரிப்பு மேலாளராகப் பணி–யாற்றிய 'மை ஆக்டோபஸ் டீச்சர்' என்கிற ஆவணப்படத்துக்கு ஆஸ்கர் விருது அறிவிக்கப்பட்டது.

ஏப்.29: இந்திய வகையைச் சேர்ந்த B.1.617 என்ற இருமுறை உருமாறிய கரோனா வைரஸ் 17 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

ஏப்.30: தமிழ்த்திரைப்பட ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான K V ஆனந்த் காலமானார்.

மே.2: ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகின: தமிழ்நாடு – தி.மு.க., கேரளம் – இடது ஜனநாயக முன்னணி, மேற்கு வங்கம் – திரிணமூல் காங்கிரஸ், அஸ்ஸாம் – பா.ஜ.க. கூட்டணி, புதுச்சேரி – NR காங்கிரஸ் கூட்டணி ஆகியவை ஆட்சியைப் பிடித்தன.

---

1. கீழ்காணும் எந்த இந்திய ஆயுதப்படையால் ஆபரேஷன் சமுத்ர சேது–2 தொடங்கப்பட்டுள்ளது?

அ) இந்திய இராணுவம்

ஆ) இந்திய வான்படை

இ) இந்திய கடற்படை ☑

ஈ) இந்தோ–திபெத்திய எல்லைக்காவல்படை

✓ இந்திய கடற்படையானது ஆபரேஷன் சமுத்ர சேது–2'ஐ தொடங்கியுள்ளது. இதன்கீழ், இந்திய கடற்படையானது சமுத்ர சேது II செயல்பாட்டின் ஒருபகுதியாக கொல்கத்தா, கொச்சி, தல்வார், தாபர், திரிகண்ட், ஜலாஷ்வா மற்றும் ஐராவத் ஆகிய 7 இந்திய கடற்படைக் கப்பல்கள், பல்வேறு நாடுகளிலிருந்து மருத்துவ உயிர்வளி நிரப்பப்பட்ட கிரையோஜனிக் கொள்கலன்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொண்டு வருவதற்காக பணியமர்த்தப்பட்டுள்ளன.

---

2. கீழ்காணும் எந்த மத்திய ஆயுத காவல்படையின் முதல் பெண் அதிகாரியாக வைஷாலி எஸ் ஹிவாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) BRO ☑

ஆ) ITBP

இ) CAPF

ஈ) CRPF

✓ சாலை கட்டுமான நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் பெண் அதிகாரியாக வைஷாலி எஸ் ஹிவாஸை எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு நியமித்துள்ளது. இந்திய – சீன எல்லை முழுவதும் சாலை இணைப்பு குறித்த ஆணைகளை அவர் நிறுவனத்திற்கு வழங்குவார். M Tech பட்டதாரியான அவர், ஏற்கனவே கார்கிலில் பணிபுரிந்துள்ளார்.

---

3. கீழ்காணும் எந்த நீடித்த வளர்ச்சி இலக்கிற்கு இணங்க பிரதமர் ஜன் ஆரோக்கிய யோஜனா தொடங்கப்பட்டது?

அ) SDG 1

ஆ) SDG 3 ☑

இ) SDG 5

ஈ) SDG 10

✓ "நலமான வாழ்வை உறுதிசெய்து, எல்லா வயதினருக்கும் நலவாழ்வை ஊக்குவிப்பது" குறித்து நீடித்த வளர்ச்சி இலக்கு (SDG) 3 கூறுகிறது. பிரதமர் ஜன் ஆரோக்கிய யோஜனா ஆயுஷ்மான் பாரத் யோஜனாவின் முக்கிய அங்கமாகும்; இது, கடந்த 2018'இல் தொடங்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய நலவாழ்வுத் திட்டமான இது, ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ₹5 லட்சம் வரையிலான காப்பீட்டு வசதியை 10.74 கோடி ஏழைகளுக்கு வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. ஏப்.30 – ஆயுஷ்மான் பாரத் திவாஸ் எனக் கொண்டாடப்பட்டது.

---

4. நைட்ரஜன் ஆக்கியை உயிர்வளி ஆக்கியாக மாற்றி நிரூபித்துள்ள நிறுவனம் எது?

அ) IISc பெங்களூர்

ஆ) IIT பம்பாய் ☑

இ) IIT மெட்ராஸ்

ஈ) IIT கௌகாத்தி

✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம்–பம்பாய், தற்போது அமைக்கப்பட்டுள்ள நைட்ரஜன் ஆலையை மாற்றியமைப்பதன்மூலம் நைட்ரஜன் ஆக்கிகளை உயிர்வளி ஆக்கிகளாக மாற்றுவதற்காக, நிரூபன அலகு ஒன்றை அமைத்துள்ளது. IIT–B ஆய்வகத்தில் இந்த ஆலையால் உருவாக்கப்பட்ட உயிர்வளியை சோதனை செய்தபோது 3.5 வளிமண்டல அழுத்தத்தில் 93–96% தூய்மையானதாக கண்டறியப்பட்டது.

---

5. மத்திய வேளாண் எந்திர பயிற்சி மற்றும் சோதனை நிறுவனம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

Central Farm Machinery Training & Testing Institute Budni (M.P.)

✓ பூத்னியில் உள்ள மத்திய வேளாண் எந்திர பயிற்சி மற்றும் சோதனை நிறுவனமானது வேளாண்மை மற்றும் உழவர்நல அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு முதன்மை நிறுவனம் ஆகும். இது மத்திய பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. சமீபத்தில், நாட்டின் முதல் மின்சார உழவு எந்திரம் இந்நிறுவனத்தில் பரிசோதனை செய்யப்பட்டது. இந்தப் புதிய மின்சார உழவு எந்திரம் மற்ற வகை உழவு எந்திரங்களைவிட சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும்.

---

6. இந்தியாவில், ஒரு கூட்டுறவு வங்கியிலிருந்து உருவாக்கப்பட்ட முதல் சிறு நிதி வங்கி எது?

அ) ஈக்விடாஸ் சிறு நிதி வங்கி

ஆ) ஜன சிறு நிதி வங்கி

இ) பந்தன் சிறு நிதி வங்கி

ஈ) சிவாலிக் சிறு நிதி வங்கி ☑

A multi-state bank

✓ சிவாலிக் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கியானது 2020ஆம் ஆண்டில், ஒரு சிறு நிதி வங்கியாக மாற்றுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கொள்கை ரீதியான ஒப்புதலைப் பெற்றது. இதன்மூலம், ஒரு சிறு நிதி வங்கியாக மாற்றப்பட்ட முதல் கூட்டுறவு வங்கியாக அவ்வங்கி திகழ்கிறது. சிவாலிக் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கியானது ஒரு சிறு நிதி வங்கியாக ஏப்.26 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

---

7. 'CLAP' என்ற பெயரில் ஒரு தூய்மை இயக்கத்தை தொடங்கவுள்ள இந்திய மாநில அரசு எது?

அ) ஆந்திர பிரதேசம் ☑

ஆ) மத்திய பிரதேசம்

இ) இராஜஸ்தான்

ஈ) கேரளா

✓ CLAP (Clean Andhra Pradesh) ஜெகனண்ணா ஸ்வச்ச சங்கல்ப திட்டத்தை ஆந்திர பிரதேச மாநில அரசு தொடங்கவுள்ளது. இந்தத் திட்டம் ஜூலை மாதத்தில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ சிற்றூர்களை தூய்மையாக வைத்திருப்பதற்கான 100 நாட்கள் தூய்மை திட்டம் மே.1 முதல் தொடங்கும். சிறந்த கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கும் அம்மாநிலம் திட்டமிட்டுள்ளது.

---

8. பிரபல ஹிந்து யாத்திரையான சோட்டா சர்தாம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) உத்தரகண்ட் ☑

இ) பீகார்

ஈ) ஒடிஸா

✓ சோட்டா சர்தாம் என்பது இமயமலையில், உத்தரகண்ட் மாநிலத்தின் கர்வால் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கியமான ஹிந்து யாத்திரை சுற்று ஆகும். இந்தச் சுற்று யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத் மற்றும் பத்ரிநாத் ஆகிய 4 தளங்களைக் கொண்டுள்ளது.

✓ மே மாதம் தொடங்கவிருந்த சர்தாம் யாத்திரையை உத்தரகண்ட் மாநில அரசு இடைநிறுத்தம் செய்துள்ளது. குருக்கள் மட்டும் சன்னதிகளுக்குள் சடங்குகளை செய்வார்கள்.

---

9. உலகளவில் மிகவும் மதிப்புமிக்க முதல் பத்து காப்பீட்டு நிறுவனங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய காப்பீட்டு நிறுவனம் எது?

அ) UIIC

ஆ) LIC ☑

இ) NIA

ஈ) NICL

✓ ஆயுள் காப்பீட்டுக் கழகமானது (LIC) உலகளவில் மூன்றாவது வலுவான மற்றும் பத்தாவது மதிப்புமிக்க காப்பீட்டு நிறுவனமாக உள்ளது. பிராண்ட் பைனான்ஸ் இன்சூரன்ஸ் 100–2021'இன் அறிக்கையின்படி, LIC'இன் மதிப்பு கிட்டத்தட்ட 7% அதிகரித்து 8.65 பில்லியன் டாலராக உள்ளது.

✓ முதல் பத்து இடங்களில் ஐந்து சீன காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன. அதில் பிங் ஆன் இன்ஷூரன்ஸ் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.

10. சமீபத்தில் 60 ஸ்டார்லிங்க் இணைய செயற்கைக்கோள்களின் புதிய தொகுப்பை, சுற்றுப்பாதையில் நிலைநிறுத்திய விண்வெளி நிறுவனம் எது?

அ) NASA

ஆ) JAXA

இ) SpaceX ☑

ஈ) புளூ ஆர்ஜின்

✓ எலோன் மஸ்க்கிற்கு சொந்தமான SpaceX சமீபத்தில் 60 ஸ்டார்லிங்க் இணைய செயற்கைக்கோள்களின் புதிய தொகுப்பை அதன் பால்கான் 9 ஏவுகலத்தின்மூலம் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது.

✓ இந்த ஆண்டின் பத்தாவது ஏவுதலைக் குறிக்கும் வகையில், முதன்மை பால்கான் 9 ஏவுகலம், புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் விண்வெளி நிலையத்திலுள்ள விண்வெளி ஏவுதல் வளாகம் நாற்பதிலிருந்து ஏவப்பட்டது. இது வெற்றிகரமாக ஏழாம் முறையாக கடலில் இறங்கியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவுடன் பிரிட்டன் ₹10,220 கோடியில் புதிய வர்த்தக ஒப்பந்தம்:

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனுடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி ஊடாக உரையாடினார். இக்காணொலிவழி மாநாட்டின்போது, இந்தியாவுடன் ₹10,200 கோடியில் புதிய வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது, பிரிட்டனில் புதிதாக 6,500 வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவை குறித்து முடிவுசெய்யப்பட்டது.

ஒப்பந்தம் குறித்து பிரிட்டன் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: பிரிட்டனின் ஆக்ஸ்போர்டு பல்கலை, அஸ்ட்ராஜெனகா மருந்து நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் இந்தியாவில் கோவிஷீல்ட் தடுப்பூசியை சீரம் நிறுவனம் தயாரிப்பது இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கு முன்னுதாரணமாகக் கருதப்படுகிறது.

இந்தியா–பிரிட்டன் இடையேயான வர்த்தக மதிப்பு தற்போது ஆண்டுக்கு ₹2.35 லட்சம் கோடியாக உள்ளது. இதை, வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இருமடங்காக அதிகரிக்க செய்யும் வகையில் இந்தியாவுடன் புதிய வர்த்தக ஒப்பந்தத்தை பிரிட்டன் மேற்கொள்ளவுள்ளது. இதுதவிர விரிவான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தையும் பிரிட்டன் மேற்கொள்ள இருக்கிறது.

இந்த ஒப்பந்தம்மூலம் பிரிட்டனில் மருத்துவம், உயிரிதொழில்நுட்பம், தகவல் தொழினுட்பம், மென்பொருள் உள்ளிட்ட துறைகளில் சுமார் 20 இந்திய நிறுவனங்கள் ₹5,453 கோடி முதலீடு செய்யவுள்ளன. அதில், சீரம் நிறுவனம் ₹2,455 கோடி முதலீடு செய்கிறது. அந்நிறுவனம், கோவிஷீல்ட் தடுப்பூசிகளை பிரிட்டனில் உற்பத்தி செய்து, விற்பனை செய்யவுள்ளது. பிரிட்டனில் விற்பனை அலுவலகத்தையும் அந்த நிறுவனம் திறக்கவுள்ளது. இதுதவிர, விப்ரோ, கியூ–ரிச் கிரியேஷன்ஸ், மாஸ்டெக், ஸ்டெர்லைட் டெக்னாலஜீஸ் உள்ளிட்ட நிறுவனங்களும் பிரிட்டனில் முதலீடு செய்யவுள்ளன.

இதேபோன்று பிரிட்டன் நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்கவும், இந்தியாவுக்கு தங்கள் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது. அதன்படி, இந்தியாவுக்கு ₹4,563 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யவும் ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதன்மூலம் பிரிட்டனில் ஏராளமானோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவுக்கு அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப்படும் ரோபோ தொழில்நுட்ப அமைப்பை பிரிட்டன் நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யவுள்ளன. அந்த வா்த்தகத்தின் மதிப்பு ₹2,046 கோடியாகும். இந்த ஒப்பந்ததால், இந்தியாவிலுள்ள மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை எளிதாக முடியும்.

புதிய வர்த்தக ஒப்பந்தப்படி, பிரிட்டனில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு சுங்கவரி குறைக்கப்படும். இதனால் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு அதிக அளவில் பொருள்களும் தொலைத்தொடர்பு சேவைகளும் ஏற்றுமதி செய்யப்படும். இவைதவிர, கல்வித்துறை, சட்ட சேவைகள் பரிமாற்றம் ஆகியவற்றில் இந்தியாவும் பிரிட்டனும் இணைந்து செயல்படவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மின்வாரிய ஊழியர்களின் ஓய்வு வயது 60 ஆக உயர்வு

மின்வாரியத்தில் பணியாற்றுவோருக்கான ஓய்வுபெறும் வயது 59'இல் இருந்து 60'ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுகுறித்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது: அரசாணையின் அடிப்படையில் மின்வாரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஓய்வுபெறும் வயதை 58'இலிருந்து 59'ஆக உயர்த்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 59'இல் இருந்து 60 வயதாக உயர்த்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது. மேலும் இந்த உத்தரவுகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், சட்ட மற்றும் அரசியலமைப்பு அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவைகளின் ஊழியர்களுக்கு பொருந்தும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக மின்வாரியம் இதை கவனமாக பரிசீலித்த பின்னர், அரசாங்கத்தின் இந்த உத்தரவுகளை மின்வாரியத்தில் ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஓய்வு வயது 59'இலிருந்து 60 ஆண்டுகளாக உயர்த்த வேண்டும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. பணியில் உள்ள அனைவருக்கும் மற்றும் 31.5.2021 முதல் ஓய்வு பெறுவோருக்கும் இது பொருந்தும்.

3. கீழடி அகழாய்வு: மூடியுடன் மண் பானை கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடந்து வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் செவ்வாய்க்கிழமை முழுமையான நிலையில் மூடியுடன் கூடிய மண்பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீழடியில் ஏழாம்கட்ட அகழாய்வு கடந்த பிப்.13 முதல் நடந்து வருகிறது. இப்பகுதியில் இதுவரை நடைபெற்ற அகழாய்வில் இருவண்ண மண் பானைகள், பானை ஓடுகள், பகடை, கல் உழவு கருவி உள்ளிட்டவை கண்டறியப்பட்டன.

தற்போது மூன்றாவதாக தோண்டப்பட்ட குழியில் 1½ அடி உயரம் கொண்ட மண்பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது. மூடியுடன் கூடிய இந்தப் பானை சேதமடையாமல் முழுமையாக கிடைத்துள்ளது. பானையின் மூடி இறுக்கமாக மூடிய நிலையில், இந்த பானையினுள் பொருள்கள் எதுவும் இருக்கும் பட்சத்தில் 2,600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்கள் பயன்படுத்திய பொருள்கள் குறித்த விவரம் தெரியவரும் என வரலாற்று ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மணலூரில் அகழாய்வு தொடக்கம்: மேலும் ஏழாம்கட்ட அகழாய்வில் கீழடி, அகரம், கொந்தகை ஆகிய இடங்களில் அகழாய்வுப்பணிகள் தொடங்கி நடந்து வருகிறது. இந்நிலையில் மணலூரில் மட்டும் அகழாய்வு செய்யும் இடத்தை தேர்வுசெய்யும் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் மணலூரில் அகழாய்வுக்காக ஜானகி அம்மாள் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் 8 குழிகள் தோண்ட திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக இருகுழிகள் தோண்டும் பணிகள் தொடங்கியுள்ளன. மணலூர் முனியாண்டி கோவிலருகே நடைபெற்று வரும் இப்பணியில் பழங்கால பானை ஓடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

4. தெலங்கானாவில் 8 சிங்கங்களுக்கு கரோனா

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் உள்ள வன உயிரியல் பூங்காவில் எட்டுச் சிங்கங்கள் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் உள்ள நேரு உயிரியல் பூங்காவில் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள எட்டுச் சிங்கங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவற்றின் உடல்நிலை சீராக உள்ளது'. என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பு ஸ்பெயினின் பார்சிலோனா, அமெரிக்காவின் பிராங்க்ஸ் நகரங்களில் உள்ள உயிரியல் பூங்காக்களில் சிங்கங்கள் மற்றும் புலிகள் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டது உறுதிசெய்யப்பட்டது. இந்நிலையில் இந்தியாவில் முதல்முறையாக சிங்கங்களுக்கு கரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

5. இடைநிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத்தொகை திட்டம்:

உயர் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்க சிறப்பு ஊக்கத்தொகை திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஊக்கத்தொகைபெறத்தகுதியான மாணவர்களின் வங்கிக்கணக்கு உள்ளிட்ட முழு விவரங்களை அனுப்புமாறு, மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10, 11, 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள், தங்கள் படிப்பு முடிந்து உயர்கல்வி பயிலச் செல்லும்போது இடைநிற்றலைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

2011–12ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், 10, 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா ₹1,500, +2 மாணவர்களுக்கு ₹2,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

1. **பசிபிக் பெருங்கடல் தரையில் சிக்கித் தவித்ததற்காக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'படானியா II' என்றால் என்ன?**

அ) சரக்குக்கப்பல்

ஆ) நீர்மூழ்கிக்கப்பல்

இ) சுரங்கப்பணி செய்யும் ரோபோ ☑

ஈ) செயற்கைக்கோள் தொகுதி

✓ பசிபிக் பெருங்கடலில் நான்கு கிமீக்கும் அதிகமான ஆழத்தில் சோதனை மேற்கொண்டிருந்த கடற்படுகையைத் தோண்டி ஆராயும் படானியா II என்ற ரோபோ அங்கு சிக்குண்டது. அதனை புகழ்பெற்ற அகழ்வாராய்ச்சி நிறுவனமான டெம் குழுமத்தின் ஆழ்கடல் ஆய்வுப்பிரிவான குளோபல் சீ மினரல் ரிசோர்ஸ்ஸ் சோதனைசெய்தது. பசிபிக் கடற்பரப்பில் காணப்படும் கோபால்ட் மற்றும் பிற மின்கல உலோகங்கள் நிறைந்த முடிச்சுகளை ஆராய்வதற்காக இந்த ரோபோ உருவாக்கப்பட்டது.

---

2. **சோதனை அடிப்படையில் தடுப்பூசிகளை டிரோன்மூலமாகக் கொண்டுசெல்வதற்கு, உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகம், பின்வரும் எந்த மாநிலத்திற்கு அனுமதியளித்துள்ளது?**

அ) கேரளா

ஆ) கர்நாடகா

இ) தெலங்கானா ☑

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ சோதனை அடிப்படையில் தடுப்பூசிகளை டிரோன்மூலமாகக் கொண்டு செல்வதற்கு, தெலங்கானா மாநில அரசுக்கு மத்திய உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம் அனுமதியளித்துள்ளது. இந்த விலக்கு ஓர் ஆண்டுகாலத்திற்கோ (அ) அடுத்த உத்தரவு வரையோ செல்லுபடியாகும். COVID–19 தடுப்பூசியை விநியோகிக்க டிரோன்களைப் பயன்படுத்துவது குறித்து சாத்தியக்கூறு ஆய்வுசெய்ய, ஏப்ரல் மாதத்தில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கவுன்சிலுக்கு அவ்வமைச்சகம் அனுமதியளித்தது.

---

3. **"இந்தியாவில் உள்ள பழங்குடியின குடும்பங்களுக்கான நீடித்த வாழ்வாதாரங்கள்" என்ற தலைப்பில் கூட்டு திட்டமொன்றை வெளி–யிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) APEDA

ஆ) MPEDA

இ) TRIFED ☑

ஈ) NABARD

✓ மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் பழங்கு–டி மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படும் முதன்மை நிறுவனம் TRIFED ஆகும். "இந்தியாவில் பழங்குடியின குடும்பங்களுக்கான நீடித்த வாழ்வாதாரங்கள்" என்ற தலைப்பில் ஒரு கூட்டு திட்டத்தில் TRIFED நுழைந்துள்ளது. வறுமையை ஒழிப்பதற்கும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத்தணிப்பதற்கும் இலக்காகக்கொண்ட ஓர் அறக்கட்டளை–யான LINK FUND இந்தத் திட்டத்திற்காக TRIFED உடன் கைகோர்த்து உள்ளது.

---

4. **உதய சூரியன், தங்கம் மற்றும் வெள்ளிக்கதிர்கள் ஆகியவை எந்த நாட்டால் வழங்கப்படுகிற விருதுகளாகும்?**

அ) சீனா

ஆ) ஜப்பான் ☑

இ) ரஷ்யா

ஈ) பிரான்ஸ்

✓ நாற்பதாண்டுகளாக கர்நாடகாவில் ஜப்பானிய மொழி கற்பித்துவரும் 79 வயதான பெங்களூரு ஆசிரியர் ஷியாமலா கணேஷ், ஜப்பானின் உதய சூரியன், தங்கம் மற்றும் வெள்ளிக் கதிர்கள் ஆகிய கௌரவங்களைப் பெற்றார். சர்வதேச உறவுகளில் சாதனைகள், ஜப்பானிய கலாச்சாரத்தை மேம்படுத்துதல், தங்கள் துறையில் முன்னேற்றம் (அ) சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு இந்தக்கௌரவம் வழங்கப்படுகிறது. ஆர்டர் ஆஃப் தி ரைசிங் சூரியனில் இது ஐந்தாம் வகுப்பு.

---

5. **உலக பத்திரிகை சுதந்திர தினம் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மே 3 ☑

ஆ) மே 4

இ) மே 5

ஈ) மே 6

✓ ஆண்டுதோறும் மே.3 அன்று உலக பத்திரிகை சுதந்திர நாளாக ஐக்கிய நாடுகள் அவை கொண்டாடுகிறது. UN பொது அவையானது பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கவும் இந் நாளை அறிவித்தது. இதுதொடர்பான தீர்மானத்தை, ஐநா, கடந்த 1993ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. "Information as a Public Good" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

6. **கீழ்காணும் எந்த மாநிலத்தில், முதல் பசுமை சூரிய ஆற்றலை கட்டுப்படுத்தி பயன்படுத்தும் ஆலையை இந்திய இராணுவமானது திறந்துள்ளது?**

அ) இராஜஸ்தான்

ஆ) சிக்கிம் ☑

இ) நாகாலாந்து

ஈ) தெலங்கானா

✓ வடக்கு சிக்கிமில் 56 KVA'இன் முதல் பசுமை சூரிய ஆற்றலை கட்டுப்படுத்தி பயன்படுத்தும் ஆலையை 16000 அடி உயரத்தில் இந்திய இராணுவம் திறந்துள்ளது. வனடியம் அடிப்படையிலான மின்கல தொழி–ல்நுட்பத்தைப் பயன்படுத்தும் இந்தத் திட்டம், மும்பை IIT உடன் இணை–ந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்குள் 175 GW புதுப்பி–க்கத்தக்க ஆற்றலை உற்பத்திசெய்ய இந்தியா இலக்கு வைத்துள்ளது.

---

7. **எதன் பரிந்துரையின்கீழ், SDRF பங்களிப்பானது மாநிலங்களுக்கு இரு சம தவணைகளில் வழங்கப்படுகிறது?**

அ) திட்ட ஆணையம்

ஆ) நிதி ஆணையம் ☑

இ) NITI ஆயோக்

ஈ) இந்திய உச்சநீதிமன்றம்

✓ நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில், 2021–22ஆம் ஆண்டுக்கா–ன தேசிய பேரிடர் நிவாரண நிதியில் மத்திய அரசு பங்கின் முதல் தவணையை, மத்திய நிதியமைச்சகத்தின் செலவினங்கள் துறை, பொ–துவாக வழங்கப்படும் காலகட்டத்தைவிட முன்கூட்டியே விடுவித்துள்ள–து. மாநிலங்களுக்கு, ₹8873.6 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. பொதுவா–க ஜூன் மாதத்தில் இது விடுவிக்கப்படும்.

✓ விடுவிக்கப்பட்டுள்ள தொகையில் 50 சதவீதத்தை, அதாவது, ₹4436.8 கோடியை, COVID–19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மாநிலங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

---

8. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற லித்தானி ஆறும் கரவுன் ஏரியும் அமைந்துள்ள நாடு எது?**

அ) லாவோஸ்

ஆ) லெபனான் ☑

இ) ஈரான்

ஈ) இஸ்ரேல்

✓ லெபனானில் அமைந்துள்ள ஒரு முதன்மை நீராதாரம் லித்தானி ஆறு ஆகும். இது பெக்கா பள்ளத்தாக்கில் பாய்ந்தோடி மத்தியதரைக்கடலில் கலக்கிறது. சமீபத்தில், லெபனானின் லித்தானி ஆற்றில் உள்ள கரவுன் ஏரிக்கரையில் டன் கணக்கில் மீன்கள் இறந்துகிடந்தன. இவ்வேரிக்கு அருகே, கழிவுநீரால் நீர் மாசுபடுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பல ஆண்டுகளாக எச்சரித்து வருகின்றனர்.

---

9. **வார்சா மம்மி திட்டத்தில் முதல் முறையாக எந்த வகை மம்மி கண்டுபிடிக்கப்பட்டது?**

அ) உறுப்பு நீக்கப்பட்ட மம்மி

ஆ) கர்ப்பிணி மம்மி ☑

இ) மூன்றாம் பாலின மம்மி

ஈ) பச்சிளங்குழந்தை மம்மி

- ✓ வார்சா மம்மி திட்டத்தில், உலகின் முதல் கர்ப்பிணி மம்மியை ஆராய்ச்சி –யாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எகிப்தில் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக கூறப்படும் இந்த மம்மி, ஓர் ஆண் போதகருக்கு சொந்தமான சவப்பெட்டியின் உள்ளே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1826ஆம் ஆண்டில் போலந்தில் உள்ள வார்சா பல்கலைக்கழகத்திற்கு இந்த மம்மி நன்கொ –டையாக வழங்கப்பட்டது. இந்தக்கண்டுபிடிப்பு, ஆராய்ச்சியாளர்களுக்கு பண்டைய காலங்களில் நிலவிய பேறுகாலத்திற்கு முந்தைய நலன் குறித்த முதலாவது ஆதாரங்களை சேகரிக்க உதவுகிறது.

---

10. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "MACS 1407" என்றால் என்ன?**

அ) COVID தடுப்பு மருந்து

ஆ) சோயாபீன்ஸ் வகை ☑

இ) புதிய கோள்

ஈ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்து புனேவின் அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் MACS 1407 என்ற புதிய அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் பூச்சி–எதிர்ப்புத் திறன்கொண்ட சோயாபீன்ஸை உருவாக்கியுள்ளனர்.
- ✓ இந்த விதை மேற்கு வங்கம், ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் போன்ற வடகிழக்கு மாநிலங்களில் பயிரிட ஏற்றதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிரான்ஸில் இருந்து புறப்பட்ட மேலும் 3 ரபேல் விமானங்கள்

பிரான்ஸில் இருந்து மேலும் 3 ரபேல் போர் விமானங்கள் இந்தியா புறப்பட்டன. இந்த விமானங்களுடன் சேர்த்து இந்தியாவிடம் உள்ள ரபேல் விமானங்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரிக்கவுள்ளது. பிரான்ஸிடம் இருந்து ₹59,000 கோடி மதிப்பில் 36 ரபேல் போர் விமானங்களை கொள் முதல் செய்ய அந்நாட்டு அரசுடன் மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்படி கடந்த ஆண்டு ஜூலை 29 அன்று முதல் தொகுப்பாக 5 ரபேல் விமானங்கள் இந்தியா வந்தடைந்தன. அந்த விமானங்களின் ஐந்தாவது தொகுப்பாக 4 விமானங்கள் கடந்த மாதம் 21 அன்று இந்தியா வந்தன.

இந்நிலையில், மேலும் 3 ரபேல் விமானங்கள் பிரான்ஸிலிருந்து இந்தியா புறப்பட்டுள்ளதாக அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது. இதை அடுத்து, இந்திய வான்படையில் உள்ள ரபேல் போர் விமானங்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரிக்கவுள்ளது. தற்போது வந்து சேரவுள்ள விமா –னங்கள் மேற்கு வங்கத்தில் உள்ள ஹசீமாரா விமானப்படை தளத்தில் நிறுத்தப்படவுள்ளன.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற ருஷிகுல்யா ஆறு பாயும் மாநிலம் எது?

அ) கர்நாடகா

ஆ) ஒடிஸா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) பீகார்

✓ ஒடிஸா மாநிலத்தில் பாயும் ருஷிகுல்யா ஆற்றுமுகத்துவாரம், ககிர்மாதா –வுக்குப் பிறகு, இந்தியாவில், ஆலிவ் ரிட்லி ஆமைகளின் இரண்டாவது பெரிய பொறிப்பகமாக கருதப்படுகிறது. இந்த ஆண்டு, ருஷிகுல்யா ஆற்று முகத்துவாரத்துக்கு அருகே ஆலிவ் ரிட்லி கடலாமைகள் கூடுகட்ட வர –வில்லை. ஏனெனில் கூடு கட்டும் காலம் கடந்துவிட்டது. கடந்த 2020 மார்ச்சில், மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆமைகள் இந்த இடத்தில் கூடு கட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

2. உலக டூனா நாளானது ஆண்டுதோறும் மே.2ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது. பெருங்கடல்கள் மற்றும் கடல்வளங்களின் நீடித்த பயன்பாட்டிற்கு அழைப்பு விடுக்கும் SDG எது?

அ) SDG 7

ஆ) SDG 9

இ) SDG 11

ஈ) SDG 14 ☑

✓ டூனா மற்றும் டூனா போன்ற இனங்கள், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் அவற்றின் ஊட்டச்சத்து பண்புகளின் காரணமாக உணவின் குறிப்பிடத்தக்க ஆதாரமாக விளங்குகின்றன. அவற்றின் இறைச்சியில் ஒமேகா–3 நிறைந்துள்ளது. மேலும் இதில் தாதுக்கள், புரதங்கள் மற்றும் வைட்டமின் B12 ஆகியவை உள்ளன. 2016ஆம் ஆண்டில், ஐநா பொது அவை ஆண்டுதோறும் மே.2 அன்று உலக டூனா நாள் கடைப்பிடிக்கப்ப –டும் என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

✓ பதினான்காவது நீடித்த வளர்ச்சி இலக்கு – பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல்வளங்களை பாதுகாத்தல் மற்றும் நீடித்த முறையில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அது உலகளாவிய டூனா சந்தைக்கு இணங்கும் விதத்தில் உள்ளது.

---

3. கிரிம்சன் சூரிய ஆற்றல் உற்பத்தித் திட்டம் அமைக்கப்படவுள்ள நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) ரஷியா

இ) ஜெர்மனி

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

✓ கலிபோர்னியா பாலையில் ஒரு மிகப்பெரிய சூரிய ஆற்றல் உற்பத்தித் திட்டத்தை நிறுவ அமெரிக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. இது கிட்டத்தட்ட 90,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் திறன்கொண்டது.

✓ கலிபோர்னியாவில், 2000 ஏக்கர் கூட்டாட்சி நிலத்தில் 550 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் கிரிம்சன் சூரிய திட்டம் நிறுவப்படும். இதை கனேடிய சூரிய ஆற்றல் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த நடவடிக் –கை காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவது, வேலைகளை உருவாக்குவது மற்றும் புதைபடிவ எரிபொருட்களின் சார்புநிலையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

4. கீழ்காணும் எந்த நோய் முற்றுபெற்றதாக, காங்கோ மக்களாட்சிக் குடியரசு அறிவித்துள்ளது?

அ) பெரியம்மை

ஆ) எபோலா ☑

இ) மலேரியா

ஈ) மூளையழற்சி நோய்



✓ காங்கோ மக்களாட்சிக் குடியரசானது எபோலா பெருந்தொற்று முற்று பெற்றதாக அறிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் 12 பேரைப் பாதித்த எபோலா, அவர்களுள் அறுவரின் இறப்பிற்குக் காரணமாக அமைந்தது. மெர்க்கின் (MRK.N) எபோலா தடுப்பூசியைப் பயன்படுத்தி அந்நாடு எபோலாவை ஒழித்தது. நோயிலிருந்து மீண்ட நோயாளி ஒருவரின் விந்து உட்பட சில உடல் திரவங்களில் இந்த வைரஸ் இருக்கக்கூடும்.

---

5. "துருவ் Mk – III MR" என்றால் என்ன?

அ) ICAR'இன் புதிய அரிசி வகை

ஆ) நவீன இலகு இரக உலங்கூர்தி ☑

இ) தரையிலிருந்து தரை பொருளைத் தாக்கும் ஏவுகணை

ஈ) பல்ஸ் டாப்ளர் ராடார்

✓ துருவ் Mk – III MR என்பது ஒரு நவீன இலகு இரக உலங்கூர்தி ஆகும். இதனை, பெங்களூரு ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இந்த உலங்கூர்தி பரிசோதனை செய்யப்பட்டு, சென்னை கடற்கரையில், ஓர் இந்திய கடலோர காவல்படை கப்பலின் மேல் தளத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இந்திய கடலோர காவல்படையினர் பயன்படுத்துவதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.

---

6. தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்படும் உயிர்வளி செறிவூட்டிகளுக்கு பொருந்தும் புதிய IGST விகிதம் என்ன?

அ) 5%

ஆ) 10%

இ) 12% ☑

ஈ) 18%

✓ தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்படும் உயிர்வளி செறிவூ –ட்டிகளுக்கான IGST'ஐ தற்போதைய 28 சதவீதத்திலிருந்து 12 சதவீத –மாக இந்திய அரசு குறைத்துள்ளது. இது, 2021 ஜூன்.30ஆம் தேதி வரை பொருந்தும். COVID பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் உயிர்வளியின் தேவை திடீரென அதிகரித்ததை அடுத்து இந்த அரிய வரிகுறைப்பு நிகழ்வு நடந்துள்ளது.

---

7. இந்திய அரசியலமைப்பின் சரத்து 164, கீழ்காணும் எதனைக் கையாளுகிறது?

அ) இந்தியக்குடியரசுத்தலைவர்

ஆ) மாநில அரசின் அமைச்சரை நியமித்தல் ☑

இ) மத்திய அரசு & மாநில அரசிற்கு இடையிலான அதிகாரப்பகிர்வு

ஈ) இந்திய உச்சநீதிமன்றம்

✓ இந்திய அரசியலமைப்பின் 164ஆவது சரத்து ஒரு மாநில அமைச்சரின் நியமனம் பற்றியதாகும். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்படுவதாகவும், மாநிலத்தின் மற்ற அமைச்சர்கள் முதல்வருடன் கலந்தாலோசித்து ஆளுநரால் நியமிக்கப்படுவார்கள் என்றும் அச்சரத்து கூறுகிறது. தொடர்ந்து 6 மாதங்களுக்கு சமஉ'வாக இல்லாத அமைச்சர் ஒருவர், 6 மாதங்கள் நிறைவடைந்த பிறகு, ஒரு அமைச்சராக செயல்பட அருகதையற்றவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8.தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் இடைக்கால தலைவ –ராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) SA பாப்டே

ஆ) A K சிக்ரி

இ) P K மிஸ்ரா

ஈ) P C பந்த் ☑

✓ தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தில் உறுப்பினராக உள்ள நீதிபதி (ஓய்வு) பிரபுல்லா சந்திர பந்த், 2021 ஏப்ரல்.25 முதல் அமலுக்கு வரும் வகையில் அதன் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ NHRC உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, 2014–2017 வரை உச்சநீதிமன்ற நீதிபதியாக அவர் பதவி வகித்து வந்தார். மேகாலயா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 2013 முதல் 2014 வரை அவர் பதவி வகித்துள்ளார்.

---

9. COVID-19 தொற்றுநோயை கையாளுவதற்காக இந்திய ஆயுதப் படை தொடங்கியுள்ள நடவடிக்கையின் பெயர் என்ன?

அ) ஆபரேஷன் பாரத்

ஆ) ஆபரேஷன் ஆத்மநிர்பார்

இ) ஆபரேஷன் CO-JEET ☑

ஈ) ஆபரேஷன் CO-WIN

- ✓ இந்திய ஆயுதப்படைகள் நாட்டின் COVID-19 பெருந்தொற்றுக்கு எதிரான முயற்சிகளுக்கு ஆதரவாக "CO-JEET" என்ற நடவடிக்கையைத் தொட-ங்கியுள்ளன. இது மருத்துவ உட்கட்டமைப்பு & உயிர்வளி விநியோக சங்கிலிகளை வலுப்படுத்துவதையும் மக்களின் மனநலனை உறுதி செய்வதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது.
- ✓ உயிர்வளி விநியோகச்சங்கிலிகளை மீட்டெடுக்கவும், COVID படுக்கைக-ளை அமைக்கவும், நிர்வாகத்திற்கு உதவவும் இராணுவம், வான்படை மற்றும் கடற்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

---

10. கங்கையின் முக்கிய கிளையாறான பத்மா ஆறு பாய்கிற நாடு எது?

அ) நேபாளம்

ஆ) வங்காளதேசம் ☑

இ) சீனா

ஈ) மியான்மர்

- ✓ பத்மா ஆறு கங்கையின் முக்கிய கிளையாறாகும். அது வங்காளதேசத்து-க்குள் நுழைவதற்கு முன்பு இந்தியாவிற்கும் வங்காளதேசத்துக்கும் இடையிலான மேற்கு எல்லையை உருவாக்குகிறது. சமீபத்தில், பத்மா ஆற்றில், மணல் ஏற்றிச் சென்ற ஒரு சரக்குக் கப்பலைத் தாக்கியதில், 30'க்கும் மேற்பட்ட பயணிகளைக் கொண்ட ஒரு படகு கவிழ்ந்தது.
- ✓ வங்காளதேசத்தின் பழைய காந்தல்பரி படகு முனையத்தில் நிகழ்ந்த இந்த விபத்தில் குறைந்தது 26 பேர் மரணித்திருப்பர்.